www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# அரையாண்டுத் தேர்வு - 2024

8 - ஆம் வகுப்பு

பதிவு எண்

## தமிழ்

காலம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் :

- மாணவர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
- விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
- தேர்வெழுத நீலம் மற்றும் கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 X 1 = 15

1. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ..........

அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

2. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ........... .

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

3. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ............ மதிக்கின்றனர்.

அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

4. புகழாலும் பழியாலும் அறியப்படுவது.........

அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை இ) நடுவு நிலைமை ஈ) பொருளுடைமை

5. உடல் நலம் என்பது ........... இல்லாமல் வாழ்தல் ஆகும்.

அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி

6. காந்தியடிகள் ...........போற்ற வாழ்ந்தார்.

அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்

7. எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம் ...........

அ) மதிய உணவுத்திட்டம் ஆ) வீட்டு வசதித் திட்டம்

இ) மகளிர் நலன் திட்டம் ஈ) இலவசக் காலணித் திட்டம்

8. இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..................

அ) இதந்தரும் ஆ) இதம்தரும் இ) இதத்தரும் ஈ) இதைத்தரும்

9. 'கண்ணா வா!' என்பது ................ த் தொடர்.

அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) வேற்றுமை

10. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ..............

அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

11. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ..............

அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பொருத்துக.

| | | |
|---|---|---|
| 12. ஆறாம் வேற்றுமை | - | முற்றெச்சம் |
| 13. எடுத்தனன் உண்டான் | - | புலவரே வருக |
| 14. மரவேர் | - | பாரியினது தேர் |
| 15. விளித் தொடர் | - | கெடுதல் விகாரம் |

பகுதி - II பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.

(21 ஆவது வினா கட்டாய வினா) 4 X 2 = 8

16. *விடைகேற்ற வினா அமைக்கவும்.*

அ) எம்.ஜி. இராமச்சந்திரன் கும்பகோணத்தில் உள்ள ஆனையடிப்பள்ளியில் பயின்றார்.

ஆ) தகடூர் இன்று தருமபுரி என்று அழைக்கப்படுகிறது?

17. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?

18. திரு.வி.க சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

19. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

20. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

21. "கேட்டார்ப்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 5 X 2 = 10

22. கலைச்சொல் தருக.

அ) Flute -

ஆ) Allergy -

23. எண்களுக்குரிய தமிழ் எண்ணுருக்களை எழுதுக.

அ) மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10.

ஆ) உலக எழுத்தறிவு தினம் டிசம்பர் 2.

24. மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) வாழையடி வாழையாக

ஆ) முதலைக்கண்ணீர்

25. திருக்குறளில் இடம் பெற்றுள்ள மோனை, எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

26. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

அ) வாழிய

ஆ) கேட்டார்

27. மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) ஆட்டு .............. *(சுவட்டம்/ மந்தை)*

ஆ) இலை .............. *(புறி/ கொய்)*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

28. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.

அ) உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ள வரையிலும்.

ஆ) கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.

பகுதி - III பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 X 3 = 6

29. நோய்கள் பெருகக் காரணம் என்ன?

30. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

இயற்கையாக கடலில் இருந்து எடுக்கப்படும் காற்றுக்கருவி சங்கு ஆகும். வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச்சங்கு என்பர். சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இலக்கியங்களில் இதனைப் பணிலம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

அ) சங்கு எங்கிருந்து எடுக்கப்படுகிறது?

ஆ) சங்கின் ஒலியை எவ்வாறு அழைப்பர்?

இ) இலக்கியங்களில் எதனைப் பணிலம் என்று குறிப்பிட்டுள்ளனர்?

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும். 2 X 3 = 6

32. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

33. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "உடலின் உறுதி" எனத் தொடங்கும் வரும்முன் காப்போம் பாடல்.

(அல்லது)

ஆ) "ஆற்றுதல்" எனத் தொடங்கி "நோன்றல்" வரை உள்ள பாடறிந்து ஒழுகுதல் பாடல்.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 X 3 = 6

35. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

36. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 X 5 = 25

38. அ) உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.

39. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.


(அல்லது)

ஆ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. வட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




41. கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.

நல்ல, படுத்து, பாய்ந்து, எறிந்த, கடந்து, வீழ்ந்த, மாட்டிய, பிடித்து, அழைத்த, பார்த்து

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

42. பள்ளியிலும் வீட்டிலும் உன் பொறுப்புகள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். **3 X 8 = 24**

43. அ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) எம்.ஜி.ஆரின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

44. அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

அ) நான் விரும்பும் கவிஞர்

முன்னுரை - இளமையும், கல்வியும் - விடுதலை வேட்கை - நாட்டுப்பற்று - மொழிப்பற்று - சமூகப்பற்று - இயற்றிய நூல்கள் - முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்தில் உள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை

***********

AL - AMEEN TUITION &
TUTORIAL CENTRE
PAPPIREDDIPATTI
DHARMAPURI (Dt) - 636 905



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com